# சைனிக் பள்ளி

**அமராவதிநகர் - 642 102, உடுமலைப்பேட்டை வட்டம்,**

**திருப்பூர் மாவட்டம், தொலைபேசி: – 04252 – 256246**

## 2017-2018 ஆண்டுக்கான சேர்க்கை அறிக்கை

**(6ஆம் வகுப்பு 9ஆம் வகுப்பு - மாணவர்கள் மட்டும்)**

மத்திய அரசின் பாதுகாப்பு அமைச்சகமும் தமிழக அரசும் ஒருங்கிணைந்து நடத்தும் உண்டுறைவிடப்பள்ளி. **CBSE** பாடத்திட்டத்தினைக் கொண்ட இப்பள்ளியில் ஆண்கள் மட்டுமே சேர முடியும். அமராவதிநகர் சைனிக்பள்ளியில் 2017-2018ஆம் கல்வியாண்டில் 6 மற்றும் 9ஆம் வகுப்பில் சேர்வதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

01.07.2017 அன்று 10 வயது முடிந்தும் 11 வயது முடியாமலும் (02.07.2006)லிருந்து 01.07.2007 தேதிக்குள் பிறந்திருக்க வேண்டும்) இருக்கும் மாணவர்கள் மட்டுமே 6ஆம் வகுப்பில் சேர முடியும்.

01.07.2017 அன்று 13வயது முடிந்தும் 14 வயது முடியாமலும் (02.07.2003 லிருந்து 01.07.2004 தேதிக்குள் பிறந்திருக்க வேண்டும்) இருந்து, அங்கீகாரம் பெற்றுள்ள பள்ளியில் 8ஆம் வகுப்பில் படித்துக் கொண்டிருக்கும் மாணவர்களுக்கு மட்டும் 9ஆம் வகுப்பில் சேரத் தகுதி உண்டு.

பெற்றோர்களின் மாத வருமான அடிப்படையில் ரூ.50,000- வரை மாநில , மத்திய அரசுகளின் உதவித் தொகை வரையறுக்கப்பட்ட விதிமுறைகளின்படி வழங்கப்படும்.

**காலியாக உள்ள இடங்கள்(தோராயமாக)** - 6ஆம் வகுப்பு - 80

9ஆம் வகுப்பு - 10

**இட ஒதுக்கீடு**

(1)15% இடங்கள் பட்டியல் வகுப்பினர்க்கும்(**SC**), 7.5% இடங்கள் பழங்குடியினர்க்கும்(**ST**) ஒதுக்கப்படும்.

(2)மீதமுள்ள இடங்களில் 67% இடங்கள் தமிழகத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு ஒதுக்கப் பட்டுள்ளன. 33 % இடங்களை பிற மாநிலத்தவர்க்கும், யூனியன் பிரதேசம் மற்றும் தமிழகத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கும் தேர்ச்சித் தரப் பட்டியல் படி ஒதுக்கப்படும்.

(3)மேல் குறிப்பிட்ட ஒதுக்கீட்டில் 25% இடங்கள் இராணுவத்தில் பணிபுரிபவர்களுக்குரிய குழந்தைகளுக்கும், முன்னாள் இராணுவத்தினர் குழந்தைகளுக்கும் ஒதுக்கப்படும்.

**தேர்வு மையங்கள்**

6ஆம் வகுப்பு-அமராவதிநகர், புதுச்சேரி

9ஆம் வகுப்பு-உடுமலைப்பேட்டை,புதுச்சேரி,சென்னை.

விளக்கக் குறிப்பேடும் விண்ணப்பப் படிவமும் பெற விரும்பினால் பொதுப் பிரிவு மற்றும் படைத்துறைப் பிரிவினைச் சேர்ந்தவர்கள், ரூ.650-க்கும் பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் ரூ.500-க்கும் (இதில் பதிவுக் கட்டணம்,மாதிரி வினாத்தாள் , பள்ளியின் குறுந்தகடு,அஞ்சல் செலவும் அடங்கும்) அமராவதிநகர் பாரத ஸ்டேட் வங்கியில்(கிளை எண்.2191) பெறத்தக்க வகையில் “முதல்வர், சைனிக் பள்ளி, அமராவதிநகர்” என்ற பெயரில் வரைவோலை(**DD**) எடுத்து,வேண்டுதல் கடிதத்துடன் அனுப்புதல் வேண்டும். எந்த வகுப்பிற்கு(6 அல்லது 9) அனுமதிக்கப்பட வேண்டும் என்பதையும், நீங்கள் எந்தப் பிரிவைச் சேர்ந்தவர்( பட்டியல் இனத்தவர், பழங்குடியினர்,படைத்துறையினர், பொதுப்பிரிவினர்)என்பதையும் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

சைனிக் பள்ளியின் இணையதளம் **www.sainikschoolamaravathinagar.edu.in** என்ற முகவரியில் விண்ணப்பப் படிவத்தைப் பதிவிறக்கம் பதிவுக் கட்டணத்தைப் படிவத்தோடு சேர்த்துக் கட்ட இயலும்.

விண்ணப்பமும் விளக்கக் குறிப்பேடும்17.10.2016முதல்18.11.2016 வரை வழங்கப்படும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணபத்தினை முதல்வர், சைனிக் பள்ளி, அமராவதிநகர் - 642 102, உடுமலைப்பேட்டை வட்டம், திருப்பூர் மாவட்டம் என்ற முகவரிக்கு 30.11.2016 தேதிக்குள் அனுப்புதல் வேண்டும். 15.1.2017(ஞாயிற்றுக் கிழமை) அன்று நுழைவுத் தேர்வு குறிப்பிட்ட தேர்வு மையங்களில் நடைபெறும்.

மேலும் விபரங்களுக்கு 04252 – 256246,256296 என்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளவும்.

**குறிப்பு**

**இப்பள்ளிக்கும் தனியார் பயிற்சி மையங்களுக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது. நுழைவுத் தேர்வு தகுதி அடிப்படையிலும், மருத்துவ சோதனை அடிப்படையிலும் மட்டுமே மாணவர்கள் சேர்க்கை நடைபெறும்.**

**முதல்வர்,**

**சைனிக் பள்ளி, அமராவதிநகர்.**